# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 91/2015 | சாட்சி | பி.வா.சா.1 |
| பெயர் | சரவணன் | நாள் | 18.03.2025 |
| தகப்பனார் பெயர் | கிருஷ்ணராஜ் (எ) ராஜ்கவுண்டர் | | |

**வாதி தரப்பில் பி.வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–**

17) ச.எண்.284/2B6 ஆனது நடைபாதையா அல்லது வண்டிப்பாதையா என்றால், ஒரு கார் செல்லும் அளவிற்கு அமைப்புடைய பாதை ஆகும். அவ்வாறெனில் அது வண்டிப்பாதை தடம் என்றால், சரிதான். ச.எண்.284/2B11 ன் உள்ள நிலத்தை நான் வங்கும் பொழுது என் முன் விற்பனையாளர்கள் மேற்படி ச.எண்.284/2B6 ல் உள்ள தடத்தை காட்டி தான் எனக்கு விற்பனை செய்தார்கள் என்றால், சரிதான்.

18) ச.எண்.284/2B6 ற்கான சக்குபந்தி விவரம் என்னவென்றால், மாணிக்கம் வகையறா நிலத்திற்கும் கிழக்கு, எனது மற்றும் சேட்டு நிலங்களுக்கு மேற்கு, கீழ் சிந்தாமணியூரிலிருந்து மேல் சிந்தாமணியூர் செல்லும் தார் சாலைக்கு தெற்கு, ரைஸ் மில் சிந்தாமணி நிலங்களுக்கு வடக்கு ஆகும். மேற்படி ரைஸ் மில் சிந்தாமணி என்பவர் என் உறவினரா என்றால் அவர் என் பங்காளி ஆவார். தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.6 மாதிரி வரைபடத்தில் A, B, C, D, E, F என காட்டப்பட்டுள்ள வண்டிப்பாதை தான் மேற்படி ச.எண்.284/2B6 என்றால், மாதிரி வரைபடத்தில் எனக்கு அடையாளம் தெரியவில்லை. புலவரைபடத்தை பார்த்தால் என்னால் கூற இயலும்.

18) தற்போது என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.1 புலவரைபடத்தில் மேற்படி ச.எண்.284/2B6 எங்கு அமைந்துள்ளது என்றால், தற்போது என்னிடம் காட்டப்பட்டுள்ள வரைபடத்தில் பொதுவாக உட்பிரிவுகள் சொல்லப்பட்டுள்ளதால் என்னால் குறிப்பிட்டு அடையாளம் காட்ட இயலாது. தற்போது என்னிடம் காட்டப்படும் கடந்த 20.02.2006 ம் தேதியில் எங்கள் குடும்ப பாகபிரிவினை பத்திரத்தில் 4 வது பக்கத்தில் 15 வது வரியில் 4 வது தாக்கு என சொல்லப்பட்டுள்ளது என்றால், சரிதான்.

அதில் என்ன சொல்லப்பட்டுள்ளது என்றால், ராஜமாணிக்கம் நிலத்திற்கும் கிழக்கு, வடக்கு, சரவணன், கோவிந்தசாமி சிவஞானம் இவர்கள் நிலத்திற்கு மேற்கு, சரவணன், சந்திரசேகர் இவர்களுக்கு பொதுவாய் விடப்பட்ட 10 அடி பொதுவழிக்கு தெற்கு என சொல்லப்பட்டுள்ளது. மேலும் இதன் மத்தியில் 33–1/2 சென்ட் நிலம் பூராவும் என சொல்லப்பட்டுள்ளது.

19) மேற்படி 4 வது தாக்கு என்பது 1.26–1/2 ஏக்கர் நித்தில் ஒரு பகுதிக்குரிய சக்குபந்தி என்றால், சரிதான். என் சொத்தை நான் கிரயம் பெற்ற சமயத்தில் மேற்படி நிலமானது ச.எண்.284/2B11 என இருந்தது என்றால், சரிதான். மேற்படி நிலம் தற்போது ச.எண்.284/2B11A மற்றும் ச.எண்.284/2B11B என பிரிந்துள்ளது என்றால், சரிதான். மேற்படி நிலங்கள் கிழமேலாக பிரிந்துள்ளதா அல்லது தென்வடலாக பிரிந்துள்ளதா என்றால், கிழமேலாக பிரிந்துள்ளது. மேற்படி இரு உட்பிரிவுகளும் ஒன்றை அடுத்து மற்றொன்று அமைந்துள்ளது என்றால், சரிதான்.

20) ச.எண்.284/2B11B க்கு என்ன சக்குபந்தி விவரம் என்றால், ச.எண்.284/2B12 ல் உள்ள எனது ஓட்டு வீட்டிற்கு மேற்கு, ச.எண்.284/2B11A விற்கு தெற்கு, ச.எண்.284/4A வில் உள்ள என் சகோதரர் நிலத்திற்கு வடக்கு, ரைஸ் மில் வகையறா நிலத்திற்கு கிழக்கு ஆகும். ச.எண்.284/2B11B ஆனது தற்போது காலி நிலமாக உள்ளது என்றால், முழுவதுமாக இல்லை. அதில் என்னுடைய வீடு உள்ளது. மேற்படி ச.எண்.284/2B11B ல் எவ்வளவு நிலம் காலியாக உள்ளது என்றால், குறிப்பிட்டு என்னால் கூற இயலாது. சுமார் 10 அடி அகலமுள்ள நிலம் காலியாக உள்ளது என்றால், சரியல்ல.

21) தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.9 ல் உள்ள தற்போது என்னிடம் காட்டப்படும் புகைபடத்தில் காட்டப்படுவது தான் என்னுடைய வீடு என்றால், சரிதான். மேற்படி வீட்டிற்கு தெற்கில் காணப்படும் காலி நிலத்தில் எவ்வளவு ச.எண்.284/2B11B ல் வருகிறது என்றால், சுமார் 4 அடி வரும். நான் சொல்வது

தவறானது என்றாலும், மேற்படி பகுதியில் சுமார் 10 அடி அகலமுள்ள நிலம் அமைந்துள்ளது என்றாலும், சரியல்ல.

22) தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 பாகபிரிவினை பத்திரத்தில் 9 வது பக்கத்தில் 25 வது வரியில் பொதுகிணற்றிலிருந்தும், அவரவர்களுக்கு பாத்தியப்பட்ட ஆழ்துளை கிணற்றிலிருந்தும் பூமிக்கு அடியில் பைப்லைன் அமைத்துக்கொள்ள நிலங்களுக்கு தண்ணீர் கொண்டு செல்லும் பாத்தியம், கேபிள் பதித்து கொள்ளும் பாத்தியம் இருவருக்கும் உண்டு. பொதுவீதியிலிருந்து தெற்கு நோக்கி, ச.எண்.284/2B6 ன் வழியாக சென்று ச.எண்.284/4A நெம்பரில் சந்திரசேகருக்கு பிரிந்த 1.23–1/2 ஏக்கர் நிலத்தின் வடபுறம் ஓரமாக தென்வடல் 10 அடி அகலத்தில் சரவணனுக்கு பாத்தியப்பட்ட கிரய சொத்திற்கு செல்லும் தடவழி பாத்தியத்தை நம்மில் D, E செட்டியூல் பாகஸ்தர்கள் எப்போதும் போல மாமூலாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என சொல்லப்பட்டுள்ளது என்றால், சரிதான்.

23) மேற்படி பத்திரத்தில் சரவணனுக்கு பாத்தியப்பட்ட கிரய சொத்து என்பது என்னுடைய நிலம் தான் என்றால், சரிதான். மேற்படி சொத்து தான் ச.எண்.284/2B11B என்றால், மேற்படி ச.எண்.284/2B11B என்பது என்னுடைய நிலம் அல்ல. அது அரசு நத்தம் காலி நிலம் ஆகும். மேற்படி நிலத்தை வாதியும், அவரது வீட்டில் வசிப்பவர்களும் பாதையாக பயன்படுத்தி வருகிறார்கள் என்றால், அதை நடைபாதையாக மட்டும் தான் பயன்படுத்துகிறார்கள். மேலும், அதில் இருசக்கர வாகனம் மட்டும் தான் செல்ல இயலும்.

24) நான் சொல்வது தவறானது என்றாலும், என்னுடைய பத்திரத்திலேயே மேற்படி பாதையானது 10 அடி அகல பொது வண்டிப்பாதை என சொல்லப்பட்டுள்ளதை மறைத்து தற்போது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால், சரியல்ல. மேற்படி ச.எண்.284/2B11B ல் செல்லும் பாதை எங்கு சென்று இணைகிறது என்றால், ச.எண்.284/2B6 ல் இருந்துதான் மேற்படி ச.எண்.284/2B11B க்கு சந்து வந்து

இணைகிறது. மேற்படி பாதை கிழக்கில் காந்தி சிலை வரை செல்கிறது என்றால், சரியல்ல.

(வாதி தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க பி.வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/—திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.